INSIGHTS

VERITÉ RESEARCH

**சேவைத்துறையில் வர்த்தகம்: இலங்கை அதன் செயலாற்றுகையை மேம்படுத்த முயலவேண்டும்**

"இலங்கை உலகின் மிகப் பெரிய வர்த்தக தரப்புகளை தவறவிட்டு தனக்குள்ளே முடங்கிக் கிடக்கிறது" மற்றும் "நன்மை பயக்காத வர்த்தக உடன்படிக்கைகள்" **எனும் தலைகப்புகளில் 2013 மே மற்றும் ஜூன் மாதங்களில் வெளியிடப்பட்ட வெறீட்டே ரிசேர்ச்சின் முன்னைய இரு ஆய்வுகள் வர்த்தக ஒப்பந்தங்களை செய்து கொள்வதில் இலங்கை அதன் ஆசிய அயலவர்களைவிட மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது என்பதையும் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களும் குறைபாடுடையன என்பதையும் சுட்டிக்காட்டின.**

**பொருட்களிலான வர்த்தகத்தைக் கடந்து சேவைகளிலான வர்த்தகத்தையும் உள்ளடக்கும் வகையில் அமையும் ஒப்பந்தங்களின் விடயத்தில் இது இன்னும் உண்மையாகிறது என்பதை இந்த ஆய்வு எடுத்துக் காட்டுகிறது. இந்தக் கருத்து** ETCA (இந்தியாவுடனான பொருளாதார மறறும் தொழில்நுட்ப ஒப்பந்தம்) விற்கு பச்சைகொடி காட்டுவதாக அமையாது. எனினும், அது சில சூழ்நிலைகளை வழங்குகிறது. ETCA வகையிலான ஒப்பந்தங்கள் இலங்கைக்கு "புதிய துறைகள்" ஆயினும், ஆசியாவிலுள்ள அதன் பல அயல்நாடுகள் கடந்த தசாப்தத்தில் அத்தகைய பொருட்கள் மற்றும் சேவைகளிலான ஒப்பந்தங்களைச் செய்துகொள்வதில் மிகவும் முனைப்புடன் இருந்துள்ளன.

ETCA தொடர்பான தற்போதைய விவாதம் இலங்கை அந்த ஒப்பந்தத்தை தொடர்ந்து முன்னெடுக்கவேண்டுமா இல்லையா என்பது பற்றிய கரிசனையையே கொண்டுள்ளது. மாற்றமாக, இலங்கைக்கு என்னென்ன செலவுகளும் நன்மைகளும் ஏற்படும் அத்துடன் அவற்றை இந்த ஒப்பந்தத்தின் பரப்பெல்லை மற்றும் கட்டமைப்பு ஆகிவற்றினால் எவ்வாறு சமாளிக்கலாம் என்பதுதான் கேட்கப்படவேண்டிய முக்கிய கேள்விகளாகும். ஒரு வர்த்தக ஒப்பந்தம் நன்மை பயக்கக்கூடியதா இல்லையா என்பது இந்த விடயங்களில்தான் பெருமளவுக்குத் தங்கியுள்ளது.

தற்போதிருக்கும் FTA (சுதந்திர வா்த்தக ஒப்நபந்தம்) களில் பெற்ற அனுபவம், இலங்கை சார்பாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவோர் தமது செயலாற்றுகையை மேம்படுத்தவேண்டுமென்பதோடு, பயன்களைப் பெற்றுக்கொள்வதற்காக கடந்த காலத்தைவிட கூடிய விவேகத்துடன் செயல்படவேன்டும் என்பதை எடுத்துக்காட்டுகிறது.


**சேவைகளிலான வர்த்தகம் நோக்கிய போக்கு**

இந்த நூற்றாண்டின் தொடக்கத்திற்கு முன்னா் உலகில் சேவைகளிலான வர்த்கத்தை உள்ளடக்கிய 8 ஒப்பந்தங்களே இருந்தன. எனினும் அதன் பின்னா் இந்த ஒப்பந்தங்களின் எண்ணிக்கை துரிதமாக அதிகரித்துள்ளது. உலக வர்த்தக நிறுவன (WTO) கூற்றுப்படி, 2016 பெப்ரவரி 1 ஆம் திகதியன்றுள்ளவாறு உலகில் பொருட்கள் மற்றும் சேவைகள் இரண்டையும் உள்ளடக்கும் 138 வர்த்தக ஒப்பந்தங்கள் உள்ளன. அதாவது இன்று உலகில் வழக்கிலிருக்கும் 419 வர்த்தக ஒப்பந்தங்களுள் மூன்றிலொரு பங்கு சேவைகளிலான வர்த்தகத்தை உள்ளடக்கும் ஒப்பந்தங்களாகும்.

<u>கிழக்காசியா முன்னிலை வகிக்கிறது:</u> வர்த்தக ஒப்பந்தங்களைப் பொறுத்தவரை ஆசிய நாடுகள் அத்துறையில் ஆதிக்கம் செலுத்துகின்றன என்பது கவனிக்கத் தக்கதாகும். 65 ஒப்பந்தங்களுக்கு கிழக்காசிய நாடுகள் தரப்புகளாக இருக்கும் அதேவேளை, ஐரோப்பிய நாடுகள் 30 ஒப்பந்தங்களுக்கும் வட அமெரிக்கா 27 ஒப்பந்தங்களுக்கும் மாத்திரமே தரப்புகளாக உள்ளன. ஏனெனில், கிழக்காசிய

நாடுகள் கூடுதலாக குழுக்களாகவன்றி தனித்தனி நாடுகளாகவே இன்னும் ஒப்பந்தங்கள் செய்துகொள்கின்றன. உதாரணமாக, ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) இருபத்தெட்டு உறுப்பு நாடுகள் ஒரு குழுவாக வர்த்தக ஒப்பந்தஙகளில் கைச்சாத்திடும் அதேவேளை, தென் கிழக்காசிய நாடுகள் சங்கத்தின் (ASEAN) பத்து உறுப்பு நாடுகள் தொடர்ந்து தனித்தனி நாடுகளாக வர்த்தக ஒப்பந்தங்கள் செய்துகொள்கின்றன.

உரு 1: "சேவை வர்த்தகத்தை" உள்ளடக்கும் வர்த்தக ஒப்பந்தங்களின் திரண்ட எண்ணிக்கை




மூலம்: RTA தரவுத் தளம், உலக வர்த்தக நிறுவனம்.

<u>தெற்காசிய மிக மெதுவாக நகர்கிறது</u>: கிழக்காசியாவோடு ஒப்பிடுகையில் தெற்காசிய நாடுகள் (இத்துறைக்குப்) பிந்தி வந்தவைகளாகும். பிராந்திய ஒத்துழைப்பிற்கான தெற்காசிய சங்கம் (SAARC) 2010 ஆம் ஆண்டு சேவைகளிலான வர்த்தக ஒப்பந்தமொன்றில் பிரவேசித்தது. எனினும், இன்றுவரை இவ்வொப்பந்தம் அமுலுக்கு வரவில்லை. ஏனெனில், இவ்வொப்பந்தத்தின்கீழ் தாம் தாராளமயப்படுத்த விரும்பும் சேவைத்துறைகளின் பட்டியலை இந்நாடுகள் இன்னும் இறுதிப்படுத்தவில்லை.

பாக்கிஸ்தான் இன்றுவரை சீனாவுடன் ஒன்றும் மலேசியாவுடன் ஒன்றுமாக இரண்டு சேவைத்துறை ஒப்பந்தங்களை செய்துகொண்டுள்ளது. சேவைத்துறையில் 5 ஒப்பந்தங்களுடன் இந்தியா இதில் முன்னிலை வகிக்கிறது. மறுபுறத்தில் இலங்கை கடந்த பத்து ஆண்டுகளில் எந்தவொரு அர்த்தமுள்ள வர்த்தக ஒப்பந்தத்தையும் செய்துகொள்ளவில்லை.

<u>இந்தியா: கிழக்கு நாடாகத் தோன்றுவதோடு, கிழக்கு நாடகவே செயல்படுகிறது</u>. ஆசிய பசுபிக் நாடுகளுடன் தனது இராஜதந்திர மற்றும் பொருளாதார உறவுகளை ஸ்திரப்படுத்துமுகமாக முன்னாள் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களினால் கடைபிடிக்கப்பட்ட “Look East – கிழக்கு நாடாகத் தோன்றும்” கொள்கையின் ஓர் அங்கமாக இந்திய அரசாங்கம் 2005 – 2015 காலப்பகுதியில் ஐந்து முக்கிய விரிவான ஒப்பந்தங்களைச் செய்துகொண்டுள்ளது (உரு 2).

| **உரு 2: சேவைத்துறையை உள்ளடக்கும் இந்தியாவின் வர்த்தக ஒப்பந்தங்கள்** | |
|---|---|
| ஒப்பந்தம் | வருடம் |
| இந்திய – சிங்கப்பூர் விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் | 2005 |
| இந்திய – தென்கொரிய விரிவான பொருளாதார பங்காண்மை ஒப்பந்தம் | 2010 |
| இந்திய – மலேசிய விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் | 2011 |
| இந்திய – ஜப்பான் விரிவான பொருளாதார பங்காண்மை ஒப்பந்தம் | 2011 |
| இந்திய – ஆசியான் (ASEAN) ஒப்பந்தம் ( பொருட்கள் - 2010, சேவைகள் - 2015) (ஆசியான் - தென்கிழக்காசிய நாடுகள் சங்கம் - புரூனே, கம்போடியா, இந்தோனேசியா, லாவோஸ், மலேசியா, மியன்மார், பிளிப்பைன்ஸ், சிங்கப்பூர், | 2015 |

| தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளை உள்ளடக்குகிறது.) | |
|---|---|

மூலம்: RTA தரவுத் தளம், உலக வர்த்தக நிறுவனம

“Act East – கிழக்கு நாடாகச் செயற்படுதல்” என்று கூறி அக்கொள்கையை பிரதமர் நரேந்திர மோடி மீண்டும் தொடங்கியுள்ளதோடு, ஆசிய பசுபிக் நாடுகளுடனான ஒருங்கிணைப்பை மேலும் துரிதப்படுத்துவதில் ஆர்வங்கொண்டுள்ளார். இக்கொள்கையின் ஓர் அங்கமாக, இந்தோனேசியா, தாய்லாந்து, மொறீசியஸ், நியூசிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தங்களுக்கான பேச்சுவார்த்தைகளில் இந்தியா ஈடுபட்டுள்ளது. இந்தியா, சீனா, ஜப்பான், அவுஸ்திரேலியா, தென்கொரியா, நியூசிலாந்து மற்றும் பத்து உறுப்பு நாடுகளைக்கொண்ட ஆசியான் ஆகியவற்றுக்கிடையோயன உத்தேச பிராந்திய விரிவான பொருளாதார ஒத்துழைப்பிற்கான பங்காண்மை (RCEP) யிலும் இந்தியா ஒரு முனைப்பான தரப்பாக உள்ளது.

**ஆசியாவோடு வர்த்தகம் செய்தல்**

உலக சந்தையில் இலங்கையுடன் நேரடியாகப் போட்டியிடும் வியட்நாம் மற்றும் கம்போடியா போன்ற ஆசியான் நாடுகள் இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுடன் பொருட்கள் மற்றும் சேவைகள் ஆகிய இரண்டையும் உள்ளடக்கும் விரிவான வர்த்தக ஒப்பந்தங்களைச் செய்துகொண்டுள்ளதோடு, ஆசியாவில் மிகப் பெரியதும் வேகமாக வளர்ச்சியுறுவதுமான இச்சந்தைகளுக்கு விருப்பத் தெரிவிலான அடைவு வாய்ப்பினையும் கொண்டுள்ளன என்பதை அவதானிப்பது முக்கியமானதாகும்.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா முதலிய மேற்குலகின் மரபுவழி சந்தைகள் உலக வர்த்தகத்தில் பிரதான தரப்புகளாக தொடர்ந்து விளங்கும் எனினும், மிகக் குறைந்த கூடைகளில் மிக அதிகமான முட்டைகளை வைக்கவேண்டியிருப்பதன் விளைவுகளை இலங்கை ஏற்கெனவே எதிர்நோக்கியுள்ளது. இந்தச் சந்தைகளிலிருந்தான (குறிப்பாக பொருளாதார மந்தத்தை அனுபவிக்கும் EU) தேங்கிக்கிடக்கும் கேள்விகள் இலங்கையின் ஏற்றுமதிகளின் வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள மந்தநிலைக்குப் பங்களிப்புச் செய்துள்ளன. ஆசியாவோடு அதிக வர்த்தகம் செய்வதற்கான மூலோபாயம் ஒன்று இலங்கைக்குத் தேவை என்பது விவாதத்திற்குறிய விடயமொன்றல்ல.

**விசயம் விபரங்களில் தங்கியுள்ளது**

ஏற்றுமதிக்கான தடைகளை குறைப்பதன்மூலம் ஒப்பந்தத்தின் மற்றைய தரப்பு நாடுகளுக்கான ஏற்றுமதிகளை விரிவுபடுத்த நாடுகள் வர்த்தக ஒப்பந்தங்களைச் செய்துகொள்கின்றன. எனவே, ஒரு வர்த்தக ஒப்பந்தத்தின் நன்மை இரண்டு அம்சங்களில் பெரிதும் தங்கியுள்ளது. முதலாவதாக, எந்தத்துறைகளும் செயற்பாடுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதில்; இரண்டாவதாக வர்த்தகத்திற்கான தடைகளை ஒப்பந்தம் எந்த பொறிமுறைகளைக்கொண்டு கையாள்கிறது (கட்டமைப்பு) என்பதில்.

பொருட்கள் சார்ந்து தற்போதிருக்கும் ஒப்பந்தங்கள் தொடர்பான இலங்கையின் அனுபவம் ஒப்பந்தத்திற்குள்ளேயும் அதற்கு வெளியேயும் உள்ள பல விதிகள் வர்த்தகத்ததிற்கான தடைகளாக அமையக்கூடும் என்பதாகும். 2000 ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவுடன் இலங்கை வர்த்தக ஒப்பந்தமொன்றைக் கொண்டிருக்கிறது. அந்த ஒப்பந்தத்தின் பரப்பெல்லை நம்பிக்கையூட்டுவதாக அமைந்திருந்தது. குறிப்பாக உணவு இறக்குமதிகளில் ஏனைய நாடுகளைவிட இலங்கைக்கு அது சிறந்த போட்டித்தன்மைமிக்க அனுகூலங்களை வழங்கியது. எனினும், பதனிடப்பட்ட உணவுப் பொருட்களுக்கு வரிகள் குறைக்கப்பட்டபோதிலும், தொடர்ந்து வர்த்தகத்தைப் பாதித்த வரி அல்லாத தடைகளைக் (NTB) கையாள்வதற்கு அந்த ஒப்பந்தம் எந்த ஏற்பாடுகளையும் கொண்டிருக்கவில்லை. அதன் விளைவாக, இந்தியாவில் நுழைவுப் புள்ளிகளில் தாமதங்களை ஏற்படுத்துவதும் செலவைக் கூட்டுவதும் வரி அனுகூலத்தைத் தடுப்பதுமான தொல்லைமிக்க தர இயைந்தொழுகல் நடைமுறைகள் முதலிய NTB களினால் இலங்கை ஏற்றுமதியாளர்கள் பாதிப்படைகின்றனர். இது தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

NTB பிரச்சினையைத் தீர்க்கத் தவறுவது பெரும் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும். இலங்கை விடயத்தில் இசைவு மதிப்பீட்டு நடைமுறைகள் தொடர்பான ஒரு பரஸ்பர அங்கீகரிப்பு ஒப்பந்தத்தைச்

(MRA) செய்து கொள்வதன்மூலம் மேற்குறிப்பிட்ட NTB பிரச்சினை தவிர்க்கப்பட்டிருக்கலாம். பெரும்பாலான வர்த்தக உடன்படிக்கைகள் இசைவு தொடர்புபட்ட தாமதங்களையும் செலவுகளையும் குறைக்குமுகமாக MRAகளை அவ்வுடன்படிக்ககைகளின் அத்தியாவசிய பாகமாகச் சேர்த்துக் கொள்கின்றன. எனினும் இலங்கை அதனைக் கேட்கத் தவறிவிட்டது. அதனால் இவ்விரு நாடுகளும் இன்னும் MRA ஒன்றைச் செய்துகொள்ளவில்லை. இசைவு தொடர்புபட்ட NTBகளினால் இலங்கை ஏற்றுமதியாளர்கள் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டிருந்தும் இது இன்னும் கைச்சாத்திடப்படவில்லை. 2000 ஆம் ஆண்டு இந்தியாவுடனான ஒப்பந்தம் இலங்கை சார்பாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டவர்களினால் எவ்வாறு மோசமாக கட்டமைக்கப்பட்டது என்பதற்கு இன்னும் பல உதாரணங்கள் உண்டு.

எனவே, முக்கிய பிரச்சினை சேவைத்துறையையும் உள்ளடக்கும் ETCA போன்ற வர்த்தக ஒப்பந்தங்களைச் செய்துகொள்வதா இல்லையா என்பதல்ல. இறுதி ஒப்பந்தத்தின் (பொருட்களின் அல்லது சேவைதுறையின்) பரப்பெல்லையும் கட்டமைப்பும் எவ்வாறு உள்ளன என்பதே பிரச்சினையாகும். ஒப்பந்தங்கள் நன்மைபயக்கும் **பரப்பெல்லையை** கொண்டிருப்பதை உறுதிப்படுத்துதல்: விறுவிறுப்பான ஏற்றுமதித் துறையைச் சென்றடைதலும் பொருத்தமான பாதுகாப்புடன் பரஸ்பரம் திறந்து விடுதலும்; அவை சிறப்பாக **கட்டமைக்கப்படுவதை** உறுதிப்படுத்தல்: துணை விதிகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றினால் கட்டுண்டுவிடாது, தடைகளை பயன்மிக்க வகையில் அகற்றுதல் ஆகியன நாட்டிற்கு ETCA வின் பெறுமதியை மதிப்பிடுவதில் மிக முக்கியமானவையாகும். விடயம் உண்மையில் விபரங்களில்தான் தங்கியுள்ளது மாற்றமாக ஒப்பந்தங்களின் பெயர்களில் அல்ல.

வெறீட்டே ரிசேர்ச் பொருளியல், சட்டம், அரசியல் மற்றும் ஊடகம் ஆகிய துறைகளில் உயர் மட்ட தீர்மானம் மேற்கொள்பவர்களுக்கு மூலோபாய பகுப்பாய்வுகளை வழங்கும் கொழும்பைத் தளமாகக்கொண்ட சுயாதீனமான ஒரு சிந்தனைக் குழாமாகும். உங்கள் கருத்துரைகள் வரவேற்கப்படுகின்றன. மின்னஞ்சல் publications@veriteresearch.org